இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 16 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 10 – செவ்வாய்க்கிழமை 26 ஆகஸ்ட் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 16 : Thiruvalluvar Year - 2056 - Aavani 10 - Tuesday 26 August 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## இந்திய ஜனநாயகம் – நாடாளுமன்ற மரபுகள் – மக்களாட்சி – அரசியலமைப்பைக் காக்க

# நீதியரசர் சுதர்சன் ரெட்டி - குடியரசுத் துணைத் தலைவராக வெற்றி பெற்று வரவேண்டும்!

### சென்னையில் நடைபெற்ற – கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, ஆக.26-

சென்னை - தியாகராயர் நகர் - அக்கார்டு ஓட்டலில், நேற்று முன்தினம் (24.8.2025), மாலை, எதிர்க்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் - உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரித்து, கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நீதியரசரை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "இந்திய ஜனநாயகம் - நாடாளுமன்ற மரபுகள் - மக்களாட்சி - அரசியலமைப்பைக் காக்க குடியரசுத் துணைத் தலைவராக நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்கள் வெற்றி பெற்று வரவேண்டும்!" என்று குறிப்பிட்டார்.

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடக்கூடிய மரியாதைக்குரிய சுதர்சன் ரெட்டி அவர்களை தமிழ்நாட்டுக்கு வருக, வருக, வருக என வரவேற்கிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மட்டுமல்ல, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பிலும் முதலில் அவருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### குடியரசு துணைத் தலைவர் பொறுப்புக்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்!

மரியாதைக்குரிய சுதர்சன் ரெட்டி அவர்களே… அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கும் உச்சநீதிமன்ற நீதியரசராக பணியாற்றுகின்ற நீங்கள், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்புக்கு மிகவும் தகுதிவாய்ந்தவர்! அதனால்தான், இந்தியா கூட்டணி சார்பில், உங்களை வேட்பாளராக அறிவித்திருக்கிறோம்!

உங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து அறிவித்த இந்தியா கூட்டணியின் அனைத்து தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! இந்தியா கூட்டணியினர் மட்டுமில்லை, ஜனநாயகத்தின் மீதும் மக்களாட்சித் தத்துவத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்ற அத்தனை பேரும் உங்களைத்தான் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்!

### தமது வாழ்வையே சட்டம்-நீதிக்காக அர்ப்பணித்தவர்!

தென் மாநிலத்தைச் சேர்ந்த இவருடைய Profile-ஐ எல்லோரும் கவனிக்க வேண்டும்.

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2025) சென்னையில், எதிர்க்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களுக்கு சால்வை அணிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலையினை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



# தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்!

2025ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான

### பெரியார் விருது

கழக துணைப் பொதுச் செயலாளரும் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான

**கனிமொழி கருணாநிதி** அவர்கட்கும்



### அண்ணா விருது

தணிக்கைக்குழு முன்னாள் உறுப்பினரும் – பாளையங்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவருமான

திரு. **சுப. சீத்தாராமன்** அவர்கட்கும்



### கலைஞர் விருது

நூற்றாண்டு கண்டவரும் – அண்ணாநகர் பகுதி முன்னாள் செயலாளரும் – அண்ணாநகர் சட்டப் பேரவைத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான

திரு. **சோ.மா.இராமச்சந்திரன்** அவர்கட்கும்



### பாவேந்தர் விருது

கழக மூத்த முன்னோடியும் – தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – குளித்தலை ஒன்றியக்குழு முன்னாள் தலைவருமான

திரு. **குளித்தலை சிவராமன்** அவர்கட்கும்



### பேராசிரியர் விருது

கழக ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் – காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் – சட்டப்பேரவை முன்னாள் கொறடாவுமான

திரு. **மருதூர் இராமலிங்கம்** அவர்கட்கும்



### மு.க.ஸ்டாலின் விருது

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான

திரு. **பொங்கலூர் நா.பழனிச்சாமி** அவர்கட்கும்



வழங்கப்படும்

நாள் : 24.08.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**